அலகு – II

1. புறநானூறு – 1. (99) அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
(2 பாடல்கள்) 2. (141) பாணன் சூடிய பசும்பொன் தாமரை

2. பத்துப்பாட்டு – 1. நெடுநல்வாடை (முழுவதும்)

3. திருக்குறள் – 1. செய்ந்நன்றியறிதல்
(2 அதிகாரங்கள்) 2. மருந்து

4. பழமொழி நானூறு – 1. அறிவுடைமை (1 அதிகாரம்)

அலகு - 2

1. புறநானூறு

எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் குறித்த முழு நூல்கள் இரண்டு; அவை பதிற்றுப்பத்தும், புறநானூறும் ஆம். 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தவர் பெயரும் தெரியவில்லை. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 157. இந்நூலுக்குரிய நானூறு பாடல்களில் 267, 268 ஆகிய எண்ணுடைய பாடல்கள் கிடைக்கவில்லை. புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு; பண்பாட்டுக் களஞ்சியம்; இலக்கியக் கருவூலம் எனப் போற்றப்படுகிறது.

1. அதியமான் நெடுமான் அஞ்சி

அதியமான் மலாடரை வென்ற சிறப்பை இச்செய்யுளில் விளக்கியுள்ளார்.

அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்புஇவண் தந்தும்
நீர்அக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர் போல
ஈகைஅம் கழற்கால் இரும்பனம் புடையல்
பூவார் காவின் புனிற்றுப் புலால் நெடுவேல்
எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின்று எய்தியும் அமையாய் செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரோடு முரணிச்
சென்றுஅமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே

பாடியவர் : ஔவையார்

திணை : வாகை

துறை : அரச வாகை

(பாடல் எண் 99)

1. புறநானூறு

அதியமான் நெடுமான் அஞ்சி

உலோச்சனார் பாடியது

திணை- வாகை துறை அரசவாகை. பாடியவர். ஔவையார்

இப்பாடலில் அதியமானின் வெற்றியும் வீரமும் போற்றப்படுகிறது. அதியமான் கோவலூரை வெற்றி பெற்ற தன்மையை எடுத்துரைக்கிறது.

அதியனின் முன்னோர்கள் தொன்மையான மரபினை உடையவர்கள். கரும்பை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள். இப் பெரிய நிலப்பரப்பை ஆண்ட அம்முன்னோரைப் போன்றே அதியமானும் சிறப்புப் பொருந்தியவன். பொன்னாலாகிய வீரக் கழலணிந்தவன்; பனந் தோட்டினாலான மாலை அணிந்தவ தன்னொடு மாறுபட்டு நிற்கும் அரசர்களுடன் போர் புரிந்து வெற்றி வாகை சூடுபவன். கோவலூரை அழித்து அரண்களை சிதைத்தவன்.

தொன்மையான சிறப்புகளை உடைய இவ்வதியமானின் வீரத்தைப்பாடுதல் அரிது. பரணர் போன்ற மிகச் சிறந்த புலவரால் மட்டுமே பாடமுடியும் என்று ஔவையார் பாடுகிறார். இதன் வழி அதியமானி புகழையும், புலவர் பரணரின் புலமையையும் ஔவை பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதியமான் கா-தில் தமிழகத்தில் கரும்பு விளைவிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

2. வையாவிக் கோப்பெரும் பேகன்

வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடியது.

பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு அசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்
யாரீ ரோஎன வினவல் ஆனாக்
காரென் ஒக்கல் கடும்பசி இரவல
வென்வேல் அண்ணல் காணா ஊங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே இனியே
இன்னேம் ஆயினேம் மன்னே என்றும்
உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈதல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்வறுமை நோக்கின்று அவன்கைவண்மையே

பாடியவர் : பரணர்

திணை : பாடாண்திணை

துறை : பாணாற்றுப்படை

(பாடல் எண் 141)

2. வையாவிக் கோப்பெரும் பேகன்

திணை - பாடாண்திணை; துறை - பாணாற்றுப்படை; புலவராற்றுப்படையும்.

பாடியவர் பரணர். வையாவிக் கோப்பெரும் பேகன் என்னும் மன்னன் பாடப்பட்டுள்ளான். மயிலுக்கு போர்வை ஈந்த கடையெழு வள்ளல்களில் ஒருவன் பேகன் எனும் குறுநில மன்னன். இவனிடம் பரிசில் பெற்று வரும் பாணன்; விறலி ஆகிய கலைஞர்கள் பொன்னாலாகிய தாமரையும், பொன்மாலையும் கொண்டு குதிரை பூட்டிய தேரில் வந்து, சுரத்திடை (காட்டில்) இளைப்பாறிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட மற்றொரு பாணர் கலைஞர் 'ஊரில் வாழ்வது போல் மகிழ்ச்சியோடு இளைப்பாறும் நீங்கள் யார்' என வினவுகிறார். அதற்கு பரிசில் பெற்ற பாணர், 'வறுமையில் பசியோடு இருக்கும், உங்களைப் போலத்தான் நாங்களும் துயரில் இருந்தோம், வள்ளல் பேகனைச் சந்தித்ததும், வறுமை நீங்கி வளம் பெற்றோம். யானைகளையும் குதிரைகளையும், நாட்டு வளத்தையும் உடையவன். மயிலுக்கு போர்வை அளித்த அருளாளன்; பிறரது வறுமைத் துயரைப் போக்குவதே அவனது நோக்கம்' என்று அப்பாணரையும் பேகனிடம் செல் உன் வறுமையும் நீங்கும் என ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

திணை - விளக்கம்

பாடாண்திணை என்பது அரசனின் வீரத்தையும், கொடைச் சிறப்பையும் பண்பு நலன்களையும் பாராட்டுவது ஆகும். பேகனின் பண்பு நலம் இங்கு போற்றப்படுகிறது.

துறை: ஆற்றுப்படை. ஆற்றுப்படை என்பது வழி நடத்துவது பாணர்களையும், புலவர்களையும் பேகனிடம் சென்றால் பொருள் கிடைக்கும் என வழிப்படுத்தியதால் இப்பாடல் 'ஆற்றுப்படை துறை' ஆயிற்று.

2. பத்துப்பாட்டு

பத்துப் பாடல்களின் தொகுப்பே பத்துப்பாட்டு. அப்பத்துப் பாடல்களாவன திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன அவை.

நெடுநல்வாடை பத்துப்பாட்டின் ஏழாவது பாட்டு 188 அடிகளைக் கொண்டது. நெடுநல்வாடை என்பதற்கு நீண்ட நல்ல வாடைக் காற்று என்று பொருள்.

கணவனைப் பிரிந்து தனித்திருக்கும் காதலிக்கு குளிர்காலம் நீண்டதாகத் தோன்றுகிறது. காதலியைப் பிரிந்து போர்க்களத்திலே புகுந்து கடமையாற்றும் காதலனுக்கு வெற்றி கிடைக்கிறது. அவன் சுறுசுறுப்புடன் பாசறையில் காணப்படுகிறான். இப்படி காதலிக்கு நீண்டதாகவும், காதலனுக்கு வெற்றியைத் தருவதாகவும் உள்ள வாடைக்காற்றை நெடுநல்வாடை என்று கூறியது பொருத்தமானது.

நெடுநல்வாடை ஆசிரியர் நக்கீரனார். இதன் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முனை இய கொடுங்கோற் கோவலர்
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட

னீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழ கறவைக்

கன்று கோள் ஒழியக்கூடிய வீசிக்
கன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொதிப்புற வான்பூப்

பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி

யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற் றுவலை கற்ப

வங்க ணகல்வய லார்பெயர் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப்புடைதிரண்டு

தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூ
ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்

படலைக் கண்ணிப் பரேரெறுழ்ந் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர

வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்

தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவ

லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக

வடவர் தந்த வான்கேழ் வட்டந்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்

திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்

வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்

பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்

காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்

துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்
றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வனைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பணைமரு ணோன்றா
ளிகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
யாரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்கு
லம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியங் கடுப்பப் புனைவி
றளிரேர் மேனித் தாய சுணங்கி
னம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்

மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கா
லூறா வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன ணோக்கி நெடிதுயிரா
மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
விருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

நெடு நல் வாடை கோவலர் வாடையால் துன்புறுதல்

"வையகம் பனிப்ப.....................புடையூஉ நடுங்க" 1 - 8

பொருள் : பருவம் பொய்க்காமல் உரிய காலத்தில் மழையைத் தரும் மேகங்கள், தாங்கள் கிடந்த மலைப்பகுதியை வலமாகச் சூழ்ந்து மேலெழுந்தன. உலகமெல்லாம் குளிரும்படி அவை, கார்காலத்தில் புதுமழையைத் தந்தன.

இடையர்கள் தங்கள் பசு, ஆடு, எருமை முதலிய விலங்குகளை வருத்தும் கோலினை எப்பொழுதும் கைகளில் வைத்திருப்பர். தங்கள் மேய்ச்சல் தொழிலுக்கு இடையூறாக இருப்பதால், மழை நீரால் தோன்றும் பெரு வெள்ளத்தை அவர்கள் வெறுத்தினர். அவ்வெள்ளத்திலிருந்து தங்கள் விலங்குகளைக் காக்க விரும்பிய அவர்கள், மேட்டு நிலப்பகுதியாகிய முல்லை நிலத்தில அவற்றை மேய விட்டனர். தாங்கள் பழகிய நிலப்பகுதியை விட்டு வேற்று நிலங்களுக்கு வந்த தனிமைத் துயரம், அவர்களை வருத்தியது.

அவர்கள், காந்தளின் நீண்ட இதழ்களால் கட்டிய மாலைகளைத் தங்கள் தலையில் சூடிக் கொண்டனர். அம்மலர் மாலைகளில் மழைநீர்பட்டு உடம்பில் தெறிப்பதால், உடம்பில் குளிர்ச்சி ஏற்பட்டது. அக்குளிர்ச்சிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள, கைகளை நெருப்பருகில் காட்டிச் சூடேற்றி, அதன் வெம்மையைத் தங்கள் கன்னங்களில் வைத்துக் கொண்டனர். அவர்களின் பற்கள், பறையடிப்பது போல் அடித்துக் கொண்டன. அவர்கள் குளிரால் நடுங்கினர்.

விளக்கம் : கூதிர்க்காலத்துக் குளிரின் மிகுதியை, இனி வரும் பகுதிகள், விளக்கமாகக் கூறுவன. அதற்கு ஏதுவாக, உலகம் குளிரால் நடுங்க என முதற்கண் கூறியுள்ளார்.

நல்லாட்சி நடைபெறும் நாட்டில், மேகங்கள், உரிய பருவத்தில் மழையைத் தரும் என்பது நம்பிக்கையாகும்.

கோவலர்கள், பல நிலங்களை நாடிச் செல்லும் இயல்புடையவர். வெளியில் அலைந்து திரியும் அவர்களையே குளிர் துன்புறுத்துகின்றது. பசுக்களைக் காத்தலைத் தங்கள் கடமையாகக் கொண்டமையால், அவர்கள் தங்கள் ஆநிரைகளை வெள்ளத்தின் அழிவிலிருந்து காப்பாற்ற, மேட்டு நிலங்களுக்கு ஓட்டிச் செல்வர்.

கூதிர்க் கால நிலை

"மாமேயல்..பானாள்." 9 - 12

பொருள் : விலங்குகள் மேய்ச்சல் தொழிலை மறந்தன. குரங்குகள், குளிச்சியால் உடல்குறுகிக் கிடந்தன. மரங்களில் தங்கியிருக்கும் பறவைகள், வாடைக்காற்று மிகுதியாக வீசுவதால், நிலத்தில் விழுந்தன. தாய்ப் பசுக்கள், பால் உண்ணும் தங்கள் கன்றுகளை உண்ணவிடாமல் உதைத்துத் தள்ளின. மலைகளைக் குளிர்ச்சியடையச் செய்வதுபோல் கூதிர்க்காலம் காணப்பட்டது.

விளக்கம் : கூதிர்ப்பானாள் என்ற தொடர், "புலம்பொடு வதியும் அரிவைக்கு" (166) என்ற தொடருடன் கூட்டி, அக் கூதிர்க் காலத்து நடுயாமப் பொழுதில், தன் கணவனைப் பிரிந்து தனிமைத் துன்பத்துடன் அந்தப்புரத்தினுள் இருந்த அரசமாதேவிக்கு எனப்பொருள் கொள்ளப்பட்டது.

"விலங்குகள் மேயாமையின், வாயிழந்தன; மாமேயல் மறப்ப, என்றார் பிறரும்" (சீவகசிந்தாமணி, 1158 நச்சினார்க்கினியர் உரை.

உலகம் குளிரால் நடுங்குவதைக் கூறிய ஆசிரியர், ஈண்டு குன்றுகளும் குளிரால் நடுங்குவதாகப் புனைந்து கூறுகின்றார்.

ஊரினது செழிப்பு

"புன்கொடி..........................துளி தூங்க." 13 - 28

பொருள் : மென்மையான கொடிகளைக் கொண்ட முசுண்டையின், பூத்த திரண்ட வெண்ணிறப் பூக்களும், பொன் போன்ற நிறமுடைய பீர்க்கம் பூக்களும், பூத்துக் காணப்பட்டன.

பசுமை நிறமுடைய கால்களையும், மென்மையான சிறகுகளையும் உடைய கொக்கின் கூட்டங்களும், சிவந்த கால்களையுடைய நாரைகளும், கரிய வண்டல்மண்ணோடு கூடிய சேறுபடிந்த ஈர நிலத்தின் மேற்பரப்பில் வெண்மணலில் எங்கும் நின்று கொண்டிருந்தன. மழையால் வருத்தமுற்ற அவை, மழை சிறிது விட்ட அளவில், இரை தேட எழுந்தன. வெள்ள நீர், வேகமாக ஓடும் போது, அதனுடன் அடித்துச் செல்லப்பட்டு, அந்நீர் அற்று ஒழுகும் போது அதில் எதிர்த்து வரும் கயல் மீன்களைக் கொக்குகளும், நாரைகளும் உணவாகக் கவர்ந்து தின்றன.

மழை குறைந்தபின் நீர் குறைந்த வெண்மேகங்கள், பொங்கிக் கிளர்ந்து விண்ணில் எழுந்தன. கூதிர்க் காலத்தில் சிறு சிறு துவலைகளாகத் தூவக் கற்றுக்கொள்வதற்காக, அவை மேல் நோக்கி எழுந்தன.

வயல்கள் அகன்ற இடமுடையவை. அழகான தோற்றம் உடையவை. அவற்றில் நீர் நிரம்பியிருந்தமையால், நெல்லின் தோகைகள் வளமாகக் காணப்பட்டன. நெற் பயிர்களிலிருந்து கதிர்கள்

வெளிப்பட்டு மேல் எழுந்தன. அவற்றில் நெல் மணிகள் முற்றியமையால் நெற்கதிர்கள் தலை சாய்ந்தன.

பாக்கு மரங்கள், பருத்த அடிப்பகுதியைக் கொண்டவை. அவற்றின் கழுத்துப் பகுதி, நீலமணி போன்ற நிறத்துடன் காணப்படும். அப்பகுதியின் வளமான மடல்களிலிருந்து, பாளைகள் வெளிப்படும். அப்பாளைகளின், திரண்ட தாறுகளில், பாக்குக் காய்கள் தோன்றும். அவை, தெளிந்த நீரைத் தம்மிடம் கொண்டவை. அவற்றின் உள்ளே இருக்கும் நுண்ணிய நீர், வற்றுவதால் காய்கள் பழுத்துத் திரண்டு காணப்படும். பாக்குக் காய்கள், இனிமையுடைய பழங்களாய் முதிர்ந்து விளங்கும்.

அகன்ற சேலைகளில் உள்ள மரங்களின் உச்சியில், கூதிர் தோன்றுவதற்கு முன்பெல்லாம், பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும். ஆனால், கூதிர்க்காலத்தில், அம்மரங்களில் மலர்கள் இல்லை. மாறாகப் பலநிறமுடைய மழைத் துளிகளே, தங்கியிருந்தன. அவைகளும், வாடைக்காற்றினால் கீழே சிந்தி விழுந்த வண்ணம் இருந்தன.

முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்.

"மாடம் ஓங்கிய..................................திரிதர" 29 - 35

பொருள் : உயர்ந்த மாடங்களைக் கொண்ட வளம் நிறைந்த பழைய ஊர் ஒன்று இருந்தது. அதன் தெருக்கள், ஆறு கிடந்ததைப் போன்ற அழகுடன் அகன்றும், நீண்டும் காணப்படும்.

மிலேச்சர்கள், தழை விரவிக் கட்டிய மாலையைத் தலையில் அணிந்திருந்தனர். அவர்கள், பருத்த, அழகான, வலிமைவாய்ந்த இறுகிய தோள்களை உடையவர். முறுக்கு ஏறிய உடம்பினையுடையவர். உடல் வலிமை அனைத்தும் நிரம்பப் பெற்றவர். அவர்கள் வண்டுகள் மொய்த்துக் கிடக்கும், கள்ளினை அதிகமாக உண்டமையால் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். சிறு துவலைகளாக வீசும் குளிர்ந்த மழைத் துளிகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை. தங்கள் தோளில், ஆடையை முன்னும் பின்னும் தொங்கவிட்டவாறு அணிந்திருந்தனர். அவ்வூரின் தெருக்களில், அம்மிலேச்சர்கள், தாம் விரும்பிய வண்ணம் விரும்பிய இடங்களில், பகற்பொழுது மட்டுமன்றிப் பிற காலங்களிலும் சுற்றித் திரிந்தனர்.

மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்

வெள்ளி வள்ளி..............................மாலை அயர 36 - 44

பொருள் : மகளிர், வெண்ணிறச் சங்கினால் செய்யப்பட்ட வளையல்கள் செறிந்த முன்கையுடையவர், மெத்தென்ற, மூங்கில் போன்ற தோள்களையுடையவர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் உணரப்படும் மென்மைத் தன்மையாகிய சாயலையுடையவர்; முத்துப் போன்ற பல்லினையுடையவர்; பொலிவுடைய மகரக்குழை அணிந்த காதின் அழகிற்குப் பொருத்தமாக விளங்கும் குளிர்ந்த நோக்கம் கொண்ட அழகிய கண்களையுடையவர். பெண்களுக்கு இயல்பாகிய மடமைக் குணத்தைக் கொண்டவர். இம்மகளிர், பசுமையான காம்புகளைக் கொண்ட செம்முல்லையின் அரும்புகளை, அழகிய பூந்தட்டுக்களில் இட்டு வைத்திருப்பர். அவை மலர்ந்து மணம் வீசுவதைக் கொண்டு, மாலைக் காலம் வந்தமையை அறிவர். இவ்வந்திப் பொழுதில், இரும்பினால் செய்யப்பட்ட விளக்கில், நெய் தோய்ந்த திரியைக் கொளுத்துவர். நெல்லையும், மலரையும் தூவிக் கை கூப்பி இல்லுறை தெய்வத்தை வழிபடுவர். வளம் நிறைந்த ஆவண வீதிகளில் மாலைக்காலம் இவ்வாறு கொண்டாடப்பட்டது.

அயர.

கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்

"மனை உறை புறவின்.......................நின்றன்றால்" 45-72

பொருள் : வீடுகளில் தங்கியுள்ள, சிவந்த கால்களையுடைய ஆண்புறாக்கள், தாம் இன்புறுவதற்குக் காரணமாகிய தங்கள் பெடையுடன், இரை தேடி உண்பதற்காக, ஊர் மன்றங்களுக்குச் செல்லாமல், இரவு என்றும் பகல் என்றும் அறியாமல் மயங்குகையால், தூண்களுக்கு மேல் அ்மைந்துள்ள, கொடுங்கைகளைத் தாங்கும்

பலகைகளில், தங்கள் கால்களின் வலியைக் குறைத்துக் கொள்வதற்காகக் காலை மாற்றி மாற்றி ஊன்றி அமர்ந்திருந்தன.

காவலையுடைய அகன்ற வீடுகளில் சிறிய குற்றேவல் இளைஞர் பணி புரிவர். அவர்கள், கருங் கொள்ளின் நிறத்தைக் கொண்ட சாந்து அரைக்கும் அம்மியில், கத்தூரி முதலிய மணப் பொருள்களைச் சேர்த்துச் சாந்து அரைப்பர்.

வடநாட்டில் உள்ளவர், கொண்டு வந்து தந்த வெண்ணிறமுடைய சந்தனக் கல்லும், தென் நாட்டில் விளையும் சந்தனக்கட்டைகளும் பயன்படுத்தப்படாமல் கிடந்தன.

குளிர்ச்சியின் மிகுதியால், மகளிர் தங்கள் கூந்தலில் மலர் மாலையிட்டு முடிக்கவில்லை. பலவாக ஒப்பனை செய்யப்படும் தங்கள் கூந்தலில், சில மலர்களை இட்டு முடிக்க விரும்பினர். கூந்தலுக்குப் நறும்புகை ஊட்டுவதற்காகக் குளிர்ச்சியைத் தரும் மயிர்ச் சந்தனம் என்னும் விறகில் தீ மூட்டினர். அதில், கரிய வயிரம் பாய்ந்த அகில் கட்டைகளையும், வெண்ணிறமுடைய கண்ட சருக்கரையினையும் சேர்த்து இட்டுப் புகை உண்டாக்கினர்.

பொருள்களில் உருவங்களைப் பதிக்கும் கலை நுட்பம் வாய்ந்தவன், தன் கைகளால் அழகாக உருவாக்கிய சிவந்த நிறத்தைக் கொண்ட ஆலவட்டம், பயன்படுத்தப்படாமல் உறையில் இடப்பட்டுக் கிடந்தது. அது, வளைந்த முளைக்கோலில் தொங்கிற்று. அதன் மீது, சிலந்தியின் வெண்மையான நூல் பின்னிக் கிடந்தது.

விண்ணுலகத்தைத் தீண்டும்படி உருவாக்கப்பட்டுள்ள எழுநிலை மாடங்களில், மேல் மாடத்தில், இளவேனிற் பருவத்து உறங்குவதற்காகப் படுக்கைகள் இருக்கும். மாடங்களில் உள்ளோர், தென்றல் காற்றை வழங்கும் சாளரங்கள் ஓரமாகக் குளிரின் மிகுதியால் உலவச் செல்வதில்லை. மாடத்தின் இப்பகுதியில் அமைந்துள்ள கதவுகள், நெருக்கமாகக் காற்றுப் புக வழியின்றி உருவாக்கப்பட்டவை. அவை, கூதிர்க் காலத்தில் மூடப்பட்டுத் தாழிடப்படும்.

வாடைக் காற்று, இப்பருவத்தில், 'கல்' என்ற ஓசையுடன் எங்கும் மழைத் துளிகளைத் தூவிற்று. இளையரும், முதியரும், குவிந்த வாயினையுடைய நீருண் கலத்தில் இருக்கும் தண்ணீரை, நீர் வேட்கையின்மையால், பருக விரும்புவதில்லை. அவர்கள், உடல் குளிர்ச்சியைப் போக்கப் பிளந்த வாயினையுடைய நெருப்புக் குண்டத்திலிருந்து (கணப்புச் சட்டி) வெளிப்படும் தீயின் வெம்மையை நுகர்ந்தனர்.

ஆடல் தொழிலில் திறமை வாய்ந்த மகளிர், தாங்கள் பாடும் பாடலுக்குப் பொருத்தமாக, யாழின் நரம்புகளை மீட்ட முற்பட்டனர். குளிர்ச்சியால் தம் தன்மை வேறுபட்ட யாழின் நரம்புகளைச் சூடேற்ற விரும்பித் தங்கள் பருத்த முலையின் மீது யாழினைத் தடவி வெப்பமூட்டினர். கருமையான தண்டினைக் கொண்ட சீறியாழின் இசை, தாங்கள் பாடும் பண்ணிசைக்கு ஏற்றவாறு அமையும் வண்ணம் நிலைநிறுத்தினர்.

கணவரைப் பிரிந்த மனைவியர், கார்காலம் முடிந்து கூதிர்க் காலத்தும் தம் காதலர் வாராமையால் தனிமைத் துயருடன் வருந்தினர்.

பொய்யாமல் உரிய காலத்தில் பெய்யும் கால மழையின் மிகுதியால் கூதிர்க் காலம் நீங்காமல் நிலை பெற்று விளங்கிற்று.

அரசியின் அரண்மனை மனைவகுத்த முறை

"போதே, மாதிரம் விரிகதிர்.......மனை வகுத்து" 72 - 78

பொருள் : எல்லாத் திசைகளிலும், தன்னுடைய விரிந்த கதிர்களைப் பரப்பும், அகன்ற இடத்தையுடைய கதிரவன், மேற்குத்திசை நோக்கிச் செல்வதற்காக விண்ணில் எழுந்தது.

வடக்கிலும், தெற்கிலுமாகிய இரண்டு இடங்களில், இரு கோல்கள் நடப்பட்டு, அவற்றின் இடையே இடப்பட்ட குச்சிகளின், கிழக்கு மேற்காகத் தாரையாக ஓடும், ஞாயிற்றின் கதிர்பட்டு உண்டாகும் நிழல், ஒரு பக்கத்தைச் சாராமல், நேர் ஒழுங்காக வீழும் அமையம் குறித்துக் கொள்ளப்படும். அந்நாளில், அவ்வமையத்தில் அரசனுடைய அரண்மனை அமைப்பதற்காகத் 'திருமுளைச் சார்த்து' என்னும் சடங்கு செய்யப்பெறும்.

சிற்ப நூலை அறிந்த தச்சர்கள், நுட்பமாக, நூல் பிடித்துப் பார்த்துக் கட்டடங்கள் அமைக்கப்பெறும். அவர்கள், அரண்மனையின் ஒவ்வொரு பகுதியும், அமைய வேண்டிய திசைகளைக் கருத்தில் கொண்டு அத்திசைகளில் காவலாக நிற்கும் தெய்வங்களால் எக்குறையும் நேராவண்ணம், அவற்றிற்கு வழிபாடுகளை நிகழ்த்துவர். பெரும்

கோபுர வாயில்

"ஒருங்கு உடன்............ஓங்கு நிலை வாயில்" 79 - 88

பொருள் : கட்டடங்கள் எல்லாவற்றையும் தம்முள் கொண்டதாக ஒரு சேர வளைத்து, உயர்ந்த நிலைகளைக் கொண்ட மதிலின் கோபுரவாயில் உருவாக்கப்பட்டது.

மதிலின் வாயிலில் அமைக்கப்பட்டுள்ள கதவுகள், ஆணிகளும் பட்டங்களுமாகிய பருத்த இரும்புகளால் பிணிக்கப் பெற்றவை. அவை, சாதிலிங்கக் குழம்பினால் செவ்வண்ணம் பூசப் பெற்றவை. தாழ்ப்பாளுடன் சேர்த்து அமைக்கப்பட்ட இவ்விரு கதவுகளும், தம்முள் சிக்கென இணைந்து பொருந்துபவை. இருபத்தேழு விண்மீன்களில், உத்தரம் என்ற விண்மீனின் பெயரைக் கொண்ட கற்பலகை, வாயிலின் இருகதவுகள் அமைந்துள்ள நிலைக்கு மேல் செருகப்பட்டிருக்கும். இப்பலகையில், குவளையின் புதிய மலர்களை உயர்த்தித் தங்கள் துதிக்கைகளால் ஏந்திய பிடிகளின் உருவங்களும், அவற்றின் நடுவில் திருமகள் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

கைத்தொழில் வல்ல தச்சனால், இடைவெளி தோன்றாமல், பல மரங்களைச் சேர்த்து முடுக்கி, மதிலின் வாயில் உருவாக்கப்படும். அவ்வாயில் நிலை, நெய் பூசப்பட்டு, வெண் சிறு கடுகினால் தூவப்பெற்ற அழகுடையதாகும். அரசனின் வெற்றியைக் குறிக்கும் வண்ணம், யானைகள் அரண்மனைக்குள் நுழைவதற்கு ஏற்றவாறு கோபுர வாயில் அகலமாகவும், உயரமாகவும் அமைந்திருக்கும். இவ்வாயில், மலையின் நடுவில் வெளியிடம் உண்டாகுமாறு திறந்தது போன்ற தோற்றத்தையுடையதாகும்.

முற்றமும் முன்வாயிலும்

"திரு நிலை..................................முன் கடை" 89 - 92

பொருள் : திருமகள் நிலையாகத் தங்கும், குற்றமில்லாத சிறப்புடையதாக அரண்மனை முற்றம் விளங்கும். ஆற்று நீரினால் கொண்டு தரப்பட்ட புது மணலால் பரப்பப்பெற்றதாக அம்முற்றம் காட்சியளிக்கும். நெடிய மயிரினையுடைய, தூய நிறம் கொண்ட கவரி மான்களும், குறுகிய கால்களைக் கொண்ட அன்னப் பறவைகளும் அரண்மனை வாயில் முற்றத்தில் தாவி விளையாடும்.

'பணைநிலை......................சிலம்பும் கோயில்' 93 - 100

பொருள் : கத்திரிகையால் மட்டம் செய்யப் பெற்ற பிடரி மயிரினைக் கொண்ட குதிரைகள், தாம் கட்டப்பட்டுள்ள கட்டுத்தறிகளில் நிற்பதை வெறுக்கின்றன. அவை, புல்லாகிய உணவைத் தின்று, குதட்டும் போது ஏற்படும் ஒலி, கேட்போர்க்குத் தனிமைத் துயரை மிகுவிப்பதாய் இருக்கும்.

நிலாவின் பயனை நுகர்வதற்காக அமைக்கப்பட்டுள்ள, வெண்ணிறமுடைய நிலா முற்றத்தில் பெய்த மழை நீர், கீழே இறங்கி விழுவதற்காக மகர மீனின் மாடங்களிலிருந்து, வாய்போலப் பிளந்த வாயினை உடையனவாய், மழை நீர்க் குழாய்கள்

அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில், நீர் நிறைந்து கீழே விழும் ஓசை, அருவி ஓசையைப் போல விளங்கும்.

அரண்மனையைச் சார்ந்த இடங்களில், தழைத்த நீண்ட பீலி அசைய, மெல்லிய இயல்பும், செருக்கும் உடைய மயில்கள் அகவும் ஓசை தோன்றும், மயில்கள், தம் இனத்தை அழைக்கும் அவ்வொலி, ஊது கொம்பின் ஒலி போல் இனிமையாக இருக்கும். செறிந்த மலைப் பகுதிகளில் தோன்றும் ஓசைகளைப் போல, அரண்மனையில் பல்வேறு ஒலிகள் தோன்றும்.

விளக்கம் : தனிமைத்துயரைத் தோற்றுவிக்கும் குதிரையின் ஒலியும், கிம்புரிப் பகுவாய் வழியாக வெளிப்படும் நீரின் ஒலியும், மயில்கள் தம் இனத்தை அழைக்கும் ஒலியும் இணைந்து, மலைப்பகுதியில் தோன்றும் ஒலிகளைப் போல அமையும். இவ்வொலிகள் பக்க மலைகளில் பட்டு எதிரொலிக்கும் என்றும் கொள்ளலாம்.

மழை நீரை வெளியேற்றும் குழாய், கலைத் திறத்துடன் மகர மீனின் வாய் போல வடிவமைக்கப்பட்டது.

மழை நீர், மாடங்களிலிருந்து வெளிப்படும் ஒலி அருவி ஒலி போன்றது என்றும், மயில்கள், தம் இனத்தை அழைக்கும் ஒலி ஊது கொம்பின் ஒலி போன்றது என்றும் உவமைகள் அமைந்துள்ளன.

அந்தப் புரத்தின் அமைப்பு

"யவனர்........................காண்புஇன் நல் இல்" 101 - 114

பொருள் : யவன நாட்டினர், தங்கள் தொழில் திறம் விளங்குமாறு உருவாக்கிய பாவைகளின் கைகளில் ஏந்தியுள்ள, வியக்கத்தக்க தோற்றமுடைய அகல் நிறையுமாறு, நெய் ஊற்றப்படும். அவ்விளக்குகளில் பருத்த திரிகள் இட்டுக் கொளுத்தப்படும். திரிகளின் செந்நிறச் சுடர் மேல் நோக்கி நிமிர்ந்து எரியும். அவ்விளக்குகளில் நெய் வற்றுங் காலத்தும், விளக்குகளின் ஒளி மழுங்கும் காலத்தும், நெய்யை ஊற்றிச் சுடர்கள் தூண்டிவிடப்படும். இச்செயலால், அரண்மனையின்,

வேறுபட்ட பல இடங்களில் பரவியுள்ள இருள் நீங்கும். பெருமையும், தலைமைப் பண்பும் உடைய பாண்டிய மன்னனைத் தவிர, பிற குற்றேவல் செய்யும் ஆண்மக்கள் ஒருவரும் அணுக இயலாத காவலைக் கொண்ட பல பகுதிகளையுடையதாக, அரசமாதேவியின் அந்தப்புரம் அமைந்திருக்கும்.

அந்தப் புரப் பகுதிகள், மலைகளைக் காண்பது போன்ற உயர்ந்த தோற்றம் உடையவை. மலைகளைச் சார்ந்து வானவில் கிடப்பது போலப் பல நிறக் கொடிகள், அம்மாடங்களில் தொங்கி அசையும். அந்தப் புரத்தின் பல இடங்கள், வெள்ளியைப் போன்ற சாந்தினால் பூசப்பட்டவை. அவை, நீல மணியைக் காண்பது போன்ற கரிய, திரண்ட, வலிமை வாய்ந்த தூண்களைக் கொண்டவை. செம்பினால் உருவாக்கப்பட்டது போன்ற, தொழில் திறம் விளங்கும்படி அமைக்கப்பட்ட நீண்ட சுவர்களையுடையவை. அவற்றில் பலநிறப் பூக்களோடு கூடிய வல்லிக் கொடி, அழகு பெறச் சுற்றிலும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும். காண்பதற்கு இனிமையாக விளங்கும் நன்மை வாய்ந்த அவ்வந்தப்புரம், கருத்தங்கும் இல்லம் எனப் போற்றப் பெறுவதாகும். (கரு அறை - கருப்பகிரகம்)

பொருள் முடிவு : திண் காழையுடையவாய்ச் செய்யுறு நெடுஞ்சுவரில், விளங்கும் கதை உரீஇப், பல்வயின் ஒரு கொடி வனைஇ, வரை கண்டன்ன தோன்றலவாய்க் கொடியவாய்ப், பாயிருள் நீங்க எரி அமை வரப் பண்ணிக், காட்சிக்கு இனியவாகிய நல் இல். கோயில், வரைப்பின், காண்பு இன் நல்இல்

அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்

"தச நான்கு.................................பாண்டில்" 115 - 123

பொருள் : நாற்பது ஆண்டுகள் நிரம்பப் பெற்றதும், முரசு போன்ற வலிமை வாய்ந்த திரண்ட கால்களைக் கொண்டதும், போரில் தன்னுடைய ஆற்றலை மிகுத்துக் காட்டும் வலிமையுடையதும், சிறந்த அழகும், புள்ளிகளைக் கொண்ட நெற்றியும் உடையதும், போரில் இறந்துபட்டதும் ஆகிய யானையின் தானே வீழ்ந்த தந்தங்களை எடுத்து, அவற்றின் திரட்சியும் செம்மையும் விளங்குமாறு, இருபுறத்தையும், தச்சன் தன்னுடைய கூர்மை வாய்ந்த சிற்றுளியால் நுட்பமாகச் செதுக்கி வட்டக்கட்டில் உருவாக்கப்பட்டது. அக்கட்டில், பெரிய இலை வடிவம் இடையே விளங்குமாறு இயற்றப்பட்டது.

சூல் முற்றித் தளர்ந்த இயல்புடைய மகளிரின், பால் முற்றித் திரண்ட முலையைப் போல, பக்கம் உருண்டிருக்கும் குடத்தை உடையதாகக், கட்டிலின் கால் அமைந்திருக்கும்.

குடத்திற்கும், கட்டிலுக்கும் நடுவே உள்ள இடம், உள்ளியின் வேர்ப்பகுதி போல, நீண்டு விளங்கக் கட்டிலின் கால்கள் வலியவாய் இயற்றப்பட்டன. அக்கட்டில், அகன்ற அளவுடன் உருவாக்கப்பட்டதாகும். பெரும் புகழ் உடையதாக இவ்வட்டக் கட்டில் விளங்குவதாகும்.

விளக்கம் : யானையின் தந்தத்தினால், கால்கள் அமைத்து, வட்டக் கட்டில் உருவாக்கப்பட்டது. கட்டிலின் காலின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் குமிழ், உள்ளிப் பூண்டின் வடிவினதாகும். காலின் மேல் அமைந்துள்ள குமிழ், சூல் முற்றிய பெண்ணின் மார்பு மேல் விளங்குவதாகும். கட்டிலின் இடை.யே தச்சன், கூரிய உளியால் இலை உருவத்தை வடிவமைக்கக் கட்டில் உருவாக்கப்பட்டது.

அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில்

"தச நான்கு..................................பாண்டில்" 115 - 123

பொருள் : நாற்பது ஆண்டுகள் நிரம்பப் பெற்றதும், முரசு போன்ற வலிமை வாய்ந்த திரண்ட கால்களைக் கொண்டதும், போரில் தன்னுடைய ஆற்றலை மிகுத்துக் காட்டும் வலிமையுடையதும், சிறந்த அழகும், புள்ளிகளைக் கொண்ட நெற்றியும் உடையதும், போரில் இறந்துபட்டதும் ஆகிய யானையின் தானே வீழ்ந்த தந்தங்களை எடுத்து, அவற்றின் திரட்சியும் செம்மையும் விளங்குமாறு, இருபுறத்தையும், தச்சன் தன்னுடைய கூர்மை வாய்ந்த சிற்றுளியால் நுட்பமாகச் செதுக்கி வட்டக்கட்டில் உருவாக்கப்பட்டது. அக்கட்டில், பெரிய இலை வடிவம் இடையே விளங்குமாறு இயற்றப்பட்டது.

சூல் முற்றித் தளர்ந்த இயல்புடைய மகளிரின், பால் முற்றித் திரண்ட முலையைப் போல, பக்கம் உருண்டிருக்கும் குடத்தை உடையதாகக், கட்டிலின் கால் அமைந்திருக்கும்.

குடத்திற்கும், கட்டிலுக்கும் நடுவே உள்ள இடம், உள்ளியின் வேர்ப்பகுதி போல, நீண்டு விளங்கக் கட்டிலின் கால்கள் வலியவாய் இயற்றப்பட்டன. அக்கட்டில், அகன்ற அளவுடன் உருவாக்கப்பட்டதாகும். பெரும் புகழ் உடையதாக இவ்வட்டக் கட்டில் விளங்குவதாகும்.

கட்டிலின் மேல் அமைந்த படுக்கை

"மடை மாண்.........................விரிந்த சேக்கை" 124 - 135

பொருள் : முத்துக்களைத் தன்னிடத்தே கொண்ட நூல், அழகு விளங்கும் வண்ணம், அக்கட்டிலின் நாற்புறமும் தொங்கவிடப்பட்டது. பன்னிறம் ஊட்டப்பட்ட மயிர்க் கற்றைகளை, படுக்கையின் நடுவிடத்தே பரப்பி, அவற்றின் மேல் சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது போன்ற காட்சிகள் பொறிக்கப்பட்ட தகடுகள் பதிக்கப்பட்டன. சாளரங்களாக விளங்கும் அத்தகடுகள், ஆணிகளால் தைக்கப்பட்டன.

இடமகன்ற காட்டுப் பகுதியில் பூத்த முல்லைப் பூக்களும், அவற்றில் வேறுபாடு புலப்படும்படி ஏனைய பல பூக்களும் கட்டிலின் மேல் நிரப்பப்பட்டன. கட்டிலின் மேல், இரண்டாய் அமைந்த படுக்கைகள் இணைத்து இடப்பட்டன. மென்மையான துணியால் அவை போர்த்தப்பட்டன. அப்படுக்கைகளின் மேல், தன்னுடைய துணையைப் புணர்ந்த அன்னச் சேவலின் தூய நிறமுடைய நுண்ணிய முடிகள் பரப்பப்பட்டன. அப்படுக்கைகளின் மீது அணைகள் இடப்பட்டன. கஞ்சியில் தோய்த்த மெல்லிய தூய மடிப்புடைய ஆடை, அப்படுக்கைகளின் மீது விரிக்கப்பட்டது.

அரசி மலரணையில் இருத்தல்

"ஆரம் தாங்கிய........புனையா ஓவியம் கடுப்ப" 136-147

பொருள் : முன்பு, அரசமாதேவியின், முத்துக்கள் பதித்துச் செய்யப்பட்ட, கச்சுத் தாங்கிய பருத்த முலையைக் கொண்ட மார்பில், குத்தும் தன்மையைக் கொண்ட நீண்ட தாலி நாண் ஒன்று மட்டும் தொங்கிக் கிடந்தது.

நலம் விளங்கும் நெற்றிப் பகுதி, ஒப்பனை செய்யப்படவில்லை. கூந்தல், சிலவாகப் பிரிந்தும், மென்மையாகவும் வறண்டும் காணப்பட்டது.

மிக்க ஒளியை வெளிப்படுத்தும் மகரக் குழை, காதுகளில் அணியப் பெறாமையால், அக்காதுகள் சிறிது தாழ்ந்து காணப்பட்டன. அவற்றின் சிறிய துளைகளில் தாளுருவிகள் மட்டும் அழுத்தப்பட்டிருந்தன.

முன்பு பொன்னால் செய்த வளையல்களை அணிந்தமையால் ஏற்பட்ட தழும்பினையுடைய மயிர் ஒழுங்கினைக் கொண்ட முன்கைகளில் இப்பொழுது, வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல் அணிந்து, காப்புநாண் கட்டியிருந்தனள்.

வாளை மீனின் பிளந்த வாயைப் போன்று விளங்கும் வளைவினையுடைய பெரிய மோதிரம் அணிந்து சிவந்த விரலில், செந்நிறமுடைய நெளி என்னும் மெல்லிய மோதிரம் அணிந்திருந்தனள்.

முன்பு, பூ வேலைப்பாடுகளைக் கொண்ட துகிலை, உயர்ந்த வளைவினையுடைய அல்குலில் அணிந்திருந்தனள். இப்பொழுது, நூலால் ஆகிய அழகிய ஆடை, மாசுபடிந்து உடலில் கிடந்தது.

வண்ணங்களைக் கொண்டு ஒப்பனை செய்யாமல், வடிவத்தை மட்டும் கோடிட்டுக் காட்டும் சித்திரத்தைப் போல, அரசமாதேவி, கட்டிலில் அமர்ந்திருந்தனள்.

சேடியரும், செவிலியரும் தலைவியைத் தேற்றுதல்

''புனைவு இல் தளிர் ஏர் மேனி........மிகக் கலுழ்ந்து''

147-156

பொருள் : அரசமாதேவியின் கால்கள், கழுவப்படாமலும், செம்பஞ்சுக் குழம்பு பூசப் பெறாமலும், பூண்கள் அணியப் பெறாமலும் இருந்தன.

புனையா ஓவியமாய்ச் சேக்கையில் கிடந்த அரசமாதேவியின் நன்மை வழங்கும் கால்களைத் தோழியர், உறக்கம் வருவதற்காக வருடினர்.

அத்தோழியர், மாந்தளிர் போன்ற அழகிய நிறம் உடையவர். மார்பில் பரவிய சுணங்கு உடையவர். அழகிய மூங்கில் போன்ற திரண்ட மென்மையான தோள்களையுடையவர். கச்சினால் இறுகப் பிணித்துக் கட்டப்பட்ட, தாமரை மொட்டுப் போன்ற முலையைபுடையவர். வளைந்து நெளியும் இடையினை உடையவர். மென்மையான இயல்புடையவர்.

நரை கலந்த, மணம் வீசும் மெல்லிய மயிரினையும், சிவந்த முகத்தையும் உடைய செவிலித்தாயர், அரசமாதேவியின் பிரிவாற்றாமை மிகுவது அறிந்து, அதனைத் தணிப்பதற்காக ஒருங்கு கூடினர். அவர்கள், பொருளொடு பொருந்தாத பொய்ம் மொழியும், மெய்ம் மொழியும் பொதிந்த உரைகள் பலவற்றைப் பலகாலும் கூறினர்.

செவிலித்தாயர், அரசமாதேவியை நோக்கி, ''நினக்குத் துணையாக அமைந்தவர் இப்பொழுதே வருகுவர்'' என அவள் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் இனிய சொற்களைக் கேட்டும் மன அமைதி கொள்ளாமல் மிகவும் கலங்கினாள்.

தலைவியின் வருத்த மிகுதி

"நுண் சேறு....................முடிக தில் அம்ம" 157 - 168

பொருள் : குடங்களைக் கடைந்து செருகப்பட்டனவும் சாதிலிங்கம் பூசிய வலிய நிலைகளையுடையனவும் ஆகிய மேற்கட்டியின் திரண்ட கால்கள், கட்டில் கால்களின் அருகில் நிற்குமாறு அமைத்து, அவற்றுடன் சேர்த்துக் கட்டப்பட்டன.

மெழுகு பூசப்பட்ட மேற்கட்டியின் மேல் புதியதாக ஓவியம் தீட்டப்பட்டது.

கதிரவன், ஆகாயத்தின்கண், வலிமை வாய்ந்த கொம்புகளைக் கொண்ட, ஆட்டின் பெயருடைய, மேட ராசி முதலாக ஏனை இராசிகளிலும் சென்று இயங்கும் விரைந்து செல்லும் இயக்கத்தைக் கொண்டவன். அவனுடன் மாறுபட்ட இயக்கமுடையதும், தலைமையுடையதும், ஆகிய திங்கட் செல்வனை உரோகிணி என்னும் நாள் மீன் எஞ்ஞான்றும் விட்டு நீங்காத இயல்பினைக் கொண்டதாகும்.

அரசமாதேவி, உரோகிணியைப் போலத் தானும் தன் கணவனைப் பிரியாமல் வாழும் பேறு பெறவில்லையே என நினைத்து, மெழுகு செய் படத்தில் தீட்டப்பெற்ற அக்காட்சியைக் கண்டு பெருமூச்செறிந்தனள்.

அரசமாதேவி, நீலப் பூவும் விரும்பும் தன் கண்களில் நிரம்பிய கண்ணீர், கண்ணின் கடைப்பகுதியில் வருதல் அறிந்து, தன்னுடைய சிவந்த விரலைச் சேர்த்து, அக் கண்ணீரைக் கீழே தெறித்தனள்.

அரசனைப் பிரிந்து, தனிமைத்துயருடன் கிடப்பதோடு, அவனிடம் ஒரு காலைக்கு ஒரு கால் பெருகும் அன்புடையவளாகவும் தலைவி விளங்கினாள்.

தலைவிக்குத் தீதாய் இருக்கும், ஆற்றுவதற்கரிய அவனைப் பற்றிய நினைவு, தீர்வதற்கு, வேந்தன் பாசறையில் தங்கிச் செய்யும் போர்த் தொழில், அவனுக்கு வெற்றியைத் தந்து, இப்பொழுதே நிறைவு பெற வேண்டும் எனச் செவிலித்தாய், கொற்றவையை இறைஞ்சி வழிபட்டனள். இதுவே தன்னுடைய விருப்பமாகும் எனவும் கொற்றவையிடம் வழிபட்டு வேண்டிக் கொண்டனள்.

பாசறையில் அரசன் நிலை

"மின் அவிர் ஓடையொடு......பாசறைத் தொழிலே" 168-188

பொருள் : யானைகள், ஒளிவிளங்கும் முகபடாம் அணிந்து பொலிவுடன் திகழ்வன. அவை போர்த் தொழிலில் மேம்பட்டவை. நீண்டும், திரண்டும் உள்ள அவற்றின் துதிக்கைகள் அற்று, நிலத்தில் வீழ்ந்து புரளும்படி கொன்ற, செயற்கரிய செயலை வீரர்கள் செய்தனர்.

யானைகளைக் கொன்ற வீரர்கள், ஒளி வீசும் வாளால் வெட்டப் பட்டு விழுப்புண் உற்றனர். அப் புண்களைக் கண்ட அரசன், அவ்வீரர்களின் துயரத்தை நீக்குவதற்காகப் பாசறையில் தான் தங்கியிருந்த இடத்திலிருந்து புறத்தே போந்தனன். வேந்தன், பாசறைக் கண் வெளியே திரியும் போது, வடதிசையிலிருந்து குளிர்ந்த வாடைக்காற்று வீசிற்று.

கால்களை இணைத்து, அதன் மேல் வைக்கப்பட்டிருந்த விளக்கில், எரியும் சுடரின் பருத்த தீக் கொழுந்துகள், வாடைக் காற்று வீசுந்தோறும் அசைந்தன. அவை, தெற்கு நோக்கி வளைந்து, சாய்ந்த தலைப்பகுதியை உடையனவாய் எரிந்தன.

வேப்பம் பூ மாலையைத் தலைப் பகுதியில் கட்டிய, வலிய காம்பினைக் கொண்ட வேலினை ஏந்தியவாறு, படைத் தலைவன், புண்பட்ட வீரர்களை அரசனுக்கு முறையாகக் காட்டிச் சென்றனன். மணிகளைத் தன்னிடத்தேயுடைய பெரிய தாளினைக் கொண்ட குசை (கடிவாளம்) உடையதும், சேணம் நீக்கப் பெறாததும், பாய்ந்து செல்லும்

செலவுடைய செருக்குக்கொண்ட குதிரைகள், கரிய சேறு பரவிய பாசறைத் தெருக்களில் தம்மீது வீசும் நீர்த் துளிகளை உதறின.

அரசன், தன் இடத் தோளிலிருந்து நழுவிக் கீழே விழும் அழகிய ஆடையைத் தன் இடப்பக்கத்தில் அணைத்துக் கொண்டனன். வாளினைத் தன் தோளில் சார்த்தியுள்ள, தறுகண்மையுடைய வாள் வீரன் தோளில், தன்னுடைய வலக்கையை இட்டவாறு அரசன், புண்பட்ட வீரர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றும்படி முகமலர்ந்து நோக்கினன். அரசனின் வெண் கொற்றக் கொடை, நூலால் கட்டப்பட்ட முத்து மாலைகளைக் கொண்டதாகும்.

'தவ்' என்னும் ஓசை தோன்றும்படி, யாண்டும் பரவி வீசும் மழைத் துளிகளை, அவ்வெண்குடை, அரசன் மேல் விழாமல் மறைத்தது. 'நள்' என்னும் ஓசையையுடைய நடுயாமத்தும், உறங்கச் செல்லாமல், சில வீரர்களுடன், அரசன் பாசறையில் புண்பட்டோரின் வருத்தத்தைப் போக்குவதற்காகத் திரிந்த வண்ணம் இருந்தனன்.

'சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற எழுவருடன் மாறுபட்டுப் பாசறைக்கண் தங்கி, அரசன் செய்யும் போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைத் தந்து இப்பொழுதே முற்றுப் பெறுவதாகுக', என்று செவிலித்தாய், கொற்றவையை வழிபட்டு வேண்டினள்.

3. திருக்குறள்

திருக்குறள் நீதி நூல்களுள் முதலிடம் பெற்றுச் சிறப்பதாகும். அரசர்களையும் ஆண்டவனையும் பற்றிப் பாடிக் கொண்டிருந்த காலத்தில் மக்களைப் பற்றிப் பாடுதல் வேண்டும் என்று சிந்தித்த புலவர் திருவள்ளுவர். நாடு, மொழி, இனம், காலம், கடவுள், மதம், சாதி அனைத்தையும் கடந்த நூல் திருக்குறள்.

இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. மொத்தம் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களைக் கொண்டது. திருக்குறளுக்கு 'முப்பால்' என்னும் பெயருமுண்டு. மேலும் பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை என்றும் வழங்குவர்.

செய்ந்நன்றி அறிதல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது 101

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது 102

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது 103

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் 104

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து 105

மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு 106

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு 107

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று 108

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும் 109

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு 110

மருந்து

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று 941

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் 942

அற்றால் அளவறிந்து உண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு 943

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து 944

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு 945

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் 946

தீயளவன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோயள வின்றிப் படும் 947

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் 948

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் 949

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து 950

3. திருக்குறள்

செய்நன்றி அறிதல்

1. உதவி செய்யாமல், பிறர் செய்த உதவிக்கு இம் மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.

2. தக்க சமயத்தில் செய்யப்பட்ட உதவி; மிகச் சிறிதாக இருந்தாலும் இவ்வுலகைவிட மிகப் பெரியதாகக் கருதப்படும் - அதாவது அளவிட முடியாதது ஆகும்.

3. பயனை எதிர்பார்க்காமல் ஒருவர் செய்கின்ற உதவி கடலைவிடப் பெரிது.

4. உதவி மிகச் சிறியதாலும் அதனை அனுபவிப்பவர் அதை மிகப்பெரிதாக நினைப்பவர். உதவி- தினை அளவு அதன் பயன்- பனை அளவு.

5. உதவி என்பது அவர் முன்பு செய்த உதவிக்கு கைம்மாறு அளவு என இல்லாமல், உதவி செய்தவரின் பண்பை பொறுத்தது.

6. குற்றம் இல்லாதவர்களின் நட்பை விடுதல் கூடாது; நமது துன்பத்தில் ஒருவர் செய்த உதவியை மறத்தல் கூடாது.

7. தங்களின் துயரத்தைப் போக்கியவர்களின் உதவியை ஏழு பிறப்பிலும் நினைத்துப்பார்ப்பர்.

8. ஒருவர் செய்த உதவியை மறப்பது நன்றல்ல; அது அறம் ஆகாது ஒருவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுதல் நன்று; அதுவே அறம் ஆகும்.

9. மிகப்பெரிய அளவில் நமக்கு கொடுமை செய்தாலும் அவர் ஒரு சிறு உதவி செய்திருப்பின் அது பெரிதாக மதிப்பிடப்பட்டு கொடுமை மறந்து போகும்.

10. எத்தகைய தீமை செய்தவர்க்கு ஆயினும் மன்னிப்பு உண்டு ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு மன்னிப்பே கிடையாது.

2. மருந்து

1. மருத்துவ நூல்கள் கூறும் வழி வாதம், பித்தம், கபம் இவை மூன்றும் அளவில் மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் வரும் (நோய்க்கான காரணம்)

2. நாம் உண்ட உணவு செரித்த பின்பு, உண்டால் நோய் வராது. பசி எடுத்தால் மட்டுமே உண்ண வேண்டும் என்பதாம் (நோய் வராமல் இருக்க வழி)

3.4. அளவோடு உண்ண வேண்டும். தேவைக்கு அதிகமாக உணவு உண்ணக்கூடாது. அளவாக அருந்துவதே உடலைப்பாதுகாக்கும் வழி ஆகும். முன் உண்ட உணவு செரித்த தன்மை அறிந்து, அடுத்த வேளை உண்ண வேண்டும்.

5. நமக்கு ஒவ்வாத உணவை உண்ணுதல் கூடாது. இதைக் கடைப்பிடித்தால் உயிருக்கு ஊறு இல்லை எந்த நோயும் இல்லை.

6. அளவு அறிந்து உண்பவனுக்கு வாழ்க்கை இன்பமாக இருக்கும். நோய் வராது. அளவுக்கு அதிகமாக உண்பவனுக்கு நோய் வரும்.

7. பசியின் அளவு அறியாமல் அதிகமாக உண்டால் நோயும் அளவில்லாமல் உண்டாகும்.

8. நோய் என்ன என்பதை ஆராய்ந்து; நோயின் காரணம் ஆய்ந்து, அதைப் போக்கும் வழியை ஆராய்ந்து செயல்பட வேண்டும் (மருத்துவர் செயல்பாடு)

9 மருத்துவர் நோயுற்றவர் உடைய வயது, நோயின் அளவு, சூழல் ஆகியவற்றை ஆய்ந்து மருத்துவம் செய்திடல் வேண்டும்.

10 நோயுற்றவன்; மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து வழங்குபவன் என மருத்துவ முறையில் நான்கு செயல்பாடுகள் மிக இன்றியமையாதன ஆகும்.

4. பழமொழி நானூறு

பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். இந்நூல் 400 வெண்பாக்களைக் கொண்டு திகழ்கிறது.

. ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு பழமொழியை இறுதியில் கொண்டு முடிகிறது.

திருக்குறளில் கூறப்படுவது போலவே சிறந்த அறங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

அறிவுடைமை

1. அறிவினால் மாட்சியொன்(று) இல்லா ஒருவன்
பிறிதினால் மாண்டது எவனாம் - பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
'அணியெல்லாம் ஆடையின் பின்.'

2. ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாயிருள் நீக்கும் 'மதியம்போல் பன்மீனும்
காய்கலா வாகும் நிலா.'

3. நற்கறிவு இல்லாரை நாட்டவும் மாட்டாதே
சொற்குறி கொண்டு துடிபண் உறுத்துவபோல்
வெற்பறைமேல் தாழும் இலங்கருவி நன்னாட!
'கற்றறிவு போகா கடை.'

4. ஆணம் உடைய அறிவினார் தந்நலம்
மானும் அறிவி னவரைத் தலைப்படுத்தல்
மானமர் கண்ணாய்! மறங்கெழு மாமன்னர்
'யானையால் யானையாத் தற்று.'

5. தெரிவுடையா ரோடு தெரிந்துணர்ந்து நின்றார்
பரியார் இடைப்புகார் பண்பறிவார் மன்ற
விரியா இமிழ்திரை வீங்குநீர்ச் சேர்ப்ப!
'அரிவாரைக் காட்டார் நரி'

6. பொற்பவும் பொல்லா தனவும் புனைந்திருந்தார்
சொற்பெய்து உணர்த்துதல் வேண்டுமோ? - விற்கீழ்
அரிபாய் பரந்தகன்ற கண்ணாய்! - 'அறியும்
பெரிதாள் பவனே பெரிது.'

7. பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக் கரந்து
மறைக்கலும் ஆமோ? - நிரந்தெழுந்து
வேயின் திரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்.

8. அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடைய ராயின் திரிந்தும் - வருமால்
பெருவரை நாட! பிரிவின் றதனால்
'திருவினும் திட்பம் பெறும்.'

4. பழமொழி நானூறு

ஒவ்வொரு பாடல் இறுதியிலும் ஒரு பழமொழியைக் கொண்டு ஓர் அறக்கருத்தை விளக்கும் வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு.

ஆசிரியர் பெயர் ÷ முன்றுறை அரையனார்

- அரையர் மரபினர்
- முன்றுறை என்பது ஊரின் பெயர்
- குறுநில மன்னர்
- சமண சமயத்தவர்
- களப்பிரர் ஆட்சி காலம்
- 400 வெண்பாக்களைக் கொண்டது

அறிவுடைமை

1. அறிவுடைய சிறப்பினை ஒரு சிறிதும் இல்லாத ஒருவன் பிறவற்றால் சிறப்புற்றான் என்பது எவ்வாறு அமையும்? மாணிக்கம் பதித்த பொன்அணியும் மணக்கும் சந்தனமும் மலர் மாலையும் இவற்றையொத்த அணிகளெல்லாம் அழகுடன் செய்வதென்பது ஆடை அணிவதன் பண்பு வைத்து எண்ணத் தக்கது.

2. உலகத்தில் பரவியுள்ள இருட்டைப் போக்குகின்ற சந்திரன் போலப் பல விண்மீன்கள் ஒன்று சேர்ந்தாலும் அவை முழுமதியைப் போல் ஒளிவீசாது. அறிவில்லாதவர் ஆயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்தாலும் மிகப்பெரிய நிலவுலகத்தில் உயர்ந்த பண்புகளால் பெருமையுடைய ஒருவனைப் போல் ஆகமாட்டார்.

3. மலைகளின் பாறைகளிலிருந்து வீழ்கின்ற ஒலிக்கும் அருவிகளையுடைய குறிஞ்சிநிலத் தலைவனே! சொல் அடையாளங் காட்ட வேண்டிய உடுக்கையினால் பண்ணிசைப்பது போல் அறிவு நலம் இல்லாதவரை கல்வியால் நிலை நிறுத்த முடியாது. அதனால் அறிவுநலம் சிறிதும் இல்லாதவர் நூல்களைக் கற்பதால் மேலும் அறிவு மிகாது.

4. மானைப் போன்ற கண்களையுடையவளே! அறிவை பற்றுக்கோடாகக் கொண்ட சான்றோர் தம்மையொத்த சான்றோரை தம்முடன் இணைத்துக் கொள்ளுதல் என்பது வீரம் பொருந்திய பேரரசர் யானையைக் கொண்டே யானையைப் பிடிக்கின்ற செயலைப் போன்றதாகும்.

5. ஒலிக்கும் அலைகளைக்கொண்ட பெருங்கடல் துறைத் தலைவனே! சேர்ந்த தெளிந்தவருடன் அதுபோன்று தெளிந்தவர் கூடியருக்கும் நுண்ணறிவற்றாரிடம் செல்ல மாட்டார். அவர்தம் குண இயல்பை அறிந்தவர் என்பதால் அவரிடம் செல்லமாட்டார். அறுவடை செய்வார்க்கு அது சுணங்குமாறு நரியைக் காட்டமாட்டார்.

6. வில் போன்ற புருவத்தினையும், அகன்ற கண்களையும் உடையவளே. நன்மைகளையும், தீமைகளையும் அடுக்கியவாறு புணர்ந்து அகலிருந்தவாறு, சொற்களைக் கூறுதல் வேண்டுமோ! அனைத்தையும் உணர்ந்து தன்னை வழிநடத்திச் செல்பவளே. அவற்றை அறிந்தவன் ஆவான்.

7. வரிசையாக வளர்ந்துள்ள மூங்கில் போன்ற சிறந்த தோள்களையும், வேல் போன்ற கண்களையும் உடையவளே! வானத்தில் விளங்குகின்ற கதிரவனின் ஒளியைக் கையால் மறைப்பவர் எவரும் இல்லை. அதுபோன்று ஆழ்ந்து அகன்ற அறிவுத்திறன் பெற்றவரை நீர்ப்பாசி போல சில சொற்களை கூறி, அவர்தம் புகழை மறைக்க இயலுமா.

8. பெரிய மனையையுடைய நாடனே! அரிய இளை மடிப்புடைய சிறந்த அணிகலன்களை அளவற்ற செல்வங்களையும் கொண்ட செல்வசெழிப்புடையவர் என்பது நிலை பெற்று தன்மையன்றி மாறியும் வரலாம். அறிவுச் செல்வம் உடையார் எனில் அது அவரைவிட்டு பிரிவு இல்லை. அதனால் செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த அறிவே நன்று